ஏப்ரல் 2021

Oceanswell
Oceans for all, forever

# COVID-19 நாடுமுடக்கலினால் இலங்கையின் கரையோர மீன்பிடித்தலின் மீதான தாக்கங்கள்

நடியா அஸ்மி, அர்பணா கிரிதரன், ஹப்சா ஜமீல்,
சங்கீதா மங்குபாய், Ph.D., ஆஷா டி வொஸ், Ph.D.

ஓசன்ஸ்வெல், 9 பூங்கா தோட்டங்கள், கொழும்பு 5, இலங்கை

ஆகஸ்ட் 2020 காலப்பகுதியில் COVID-19 தொற்றுநோயின் விளைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட நாடுமுடக்கலினால் இலங்கையின் கரையோர மீன்பிடித்துறைக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பான ஒரு விரிவான அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு.

முழுப்பதிப்பு இங்கே பெற்றுக்கொள்ள முடியும் -
அஸ்மி, ந., கிரிதரன், அ., ஜமீல், ஹ., மங்குபாய், ச., டி வொஸ், ஆ. (2021). COVID-19 நாடுமுடக்கலினால் இலங்கையின் கரையோர மீன்பிடித்தலின் மீதான தாக்கங்கள். ஓசன்ஸ்வெல், கொழும்பு.

இறுதி PDF இணைக்கப்படும்-
https://oceanswell.org/publications/the-impacts-of-covid-19-lockdowns-on-coastal-fisheries-in-sri-lanka

*தமிழ் மொழியாக்கம்: சத்தியவாகீஸ்பரன் சிவந்தன்*

- COVID-19 தொற்று உலகெங்கிலும் அதிகரித்துள்ளதன் காரணமாக, இலங்கை அரசாங்கம் 2020 பங்குனி 20 அன்று நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்கு உத்தரவை விதித்ததுடன், அதைத் தொடர்ந்து பல்வேறுவிதமான முடக்கல்கள் மற்றும் பயண கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த ஆய்வானது இந்த கட்டுப்பாடுகளினால் இலங்கைத்தீவைச் சுற்றியுள்ள கரையோர மீன்பிடி சமூகங்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களை ஆய்வு செய்ய ஓசியன்ஸ்வெல்ஸ்ஸினால் மேற்கொள்ளப்பட்டது.

- 2020 ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 29 வரையான காலப்பகுதியில் இலங்கை கரையோரத்தில் தெரிவுசெய்யப்பட்ட 13 ஆய்வு தளங்களில் நானூற்று பதினைந்து ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த காலகட்டத்தில் அரசாங்கம் சமூகத் தொற்று என்பதை அறிவித்திருக்கவில்லை. இந்த ஆய்வு மூலமாக அறியப்பட்ட இலங்கையில் மீன்பிடித்துறை மீதான COVID-19 இன் முக்கிய தாக்கங்களானது தீவு முழுவதற்குமான ஊரடங்கு உத்தரவு, எல்லைகளைக் கடப்பதற்கான பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் வர்த்தக ஒழுங்குமுறைகள் போன்றவற்றினால் ஏற்பட்டிருந்தன.

- நடத்தப்பட்ட ஆய்வில் 25% ஆன பெண்களே பங்குபற்றியிருந்தனர் என்பதுடன் அவர்களில் பெரும்பாலானோர் கடலுணவு பதனிடுவோர்.

- இந்த ஆய்வில் கடற்தொழிலாளர்கள், விற்பனையாளர்கள் / வர்த்தகர்கள் மற்றும் பதினிடுவோர், இந்தக் கட்டுப்பாடுகளினால் எதிர்மறையாக பாதிக்கப்பட்ட அனைவரும் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்தனர். கடற்தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் கடலுக்குச் செல்ல விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் முழு கடற்தொழில் சார் மதிப்பு சங்கிலியையும் சீர்குலைத்திருந்தது. இந்த ஆய்வில் பங்குபற்றியவர்களில் எண்பத்து நான்கு சதவிகிதத்தினர் தங்கள் வருமானத்தில் குறைவு இருப்பதாகக் கூறினர். மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமை, நுகர்வோரின் கடலுணவுகளுக்கான தேவை குறைவடைந்தமை மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி ஆகியவை இந்த வருமானக்குறைவிற்கு காரணமாக இருக்கலாம்.

- ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான பதனிடுவோரே இந்த நாடுமுடக்கல் நிலையானது அவர்களின் செயற்பாட்டினை எதிர்மறையாக பாதித்ததாக தெரிவித்திருந்தனர். இது அவர்களின் உற்பத்திப் பொருட்களின் கூடிய காலாவதிக் காலம் காரணமாக இருந்திருக்கலாம் என்பதுடன், இந்த நிலையானது இது போன்ற சந்தை மாற்றங்களின் போது அவர்களின் பங்குகள் மீது அதிக கட்டுப்பாட்டை வழங்குகின்றது.

- கடல் உணவு விலையில் எந்த தெளிவான போக்கும் காணப்படவில்லை. இருப்பினும், அதிக எண்ணிக்கையிலான ஆழ்கடல் மீனவர்கள் கடல் உணவு விலையில் சரிவு இருந்ததாக தெரிவித்திருந்தனர். அவர்கள் பிடிக்கும் அதிக மதிப்புள்ள கடல் உணவுகளின் மீதான வாங்கும் திறனில் ஏற்பட்ட வீழ்ச்சி, வர்த்தக கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதி தேவை குறைவடைந்தமை ஆகியன இந்த நிலைக்கு காரணமாக இருந்திருக்க முடியும்.

- இந்த நிலையினை சமாளிப்பதற்காக அவர்களுடைய சேமிப்புகளைப் பயன்படுத்துதல் மற்றும் கடன் சேவைகளைப் பயன்படுத்துதல் என்பன இந்த ஆய்வின் போது கூறப்பட்ட உத்திகளாக இருந்ததுடன், அதே நேரத்தில் ஒரு சிறிய எண்ணிக்கையிலானவர்கள் தாங்கள் அரசாங்கம் வழங்கிய இடர்காலக்கொடுப்பனவை சார்ந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தனர். பதிலளித்தவர்கள் நிதி உதவி மற்றும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் போன்ற சிறந்த நிதிச்சேவைகளை கோரியிருந்தனர்.

- ஒட்டுமொத்தமாக இந்த ஆய்வு, தொழில் நிமித்தம் கடலுக்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டது என்பதைக் காட்டுவதுடன், வரையறுக்கப்பட்ட சமாளிக்கும் உத்திகள் மற்றும் மாற்று வருமான முறைகள் இல்லாமை போன்ற காரணிகளால் சிறியளவிலான கடற்தொழில்

சமூகங்கள் எதிர்மறையாக பாதிக்கப்பட்டிருந்தன என்பதையும் கண்டறிகின்றது.

- இந்த ஆய்வின் முடிவுகள், கடல் உணவுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையினை மட்டுப்படுத்தக்கூடிய நிலைகள் மற்றும் கடற்தொழில் மதிப்பு சங்கிலியின் சீர்குலைவுகள் போன்றவற்றினை ஏற்படுத்தக்கூடிய எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்வு கூறவும், அந்த நிலைகளுக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்குமான ஒரு மாதிரியாக பயன்படுத்தப்படலாம். மிகையான மீன்பிடித்தல், காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட காரணிகளான புயல், கடல் மட்ட உயர்வு மற்றும் கரையோர வெள்ளம் போன்றவை எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பான சூழ்நிலைகளாக இருக்கலாம் என்பதுடன், அவை கடல் உணவுப் பங்குகளை அச்சுறுத்தும் மற்றும் அவற்றுக்கான அணுகலைக் கட்டுப்படுத்தும் காரணிகளாக அமையலாம். இதன் முடிவுகள் பாரம்பரிய மீன்பிடி இடங்களை உற்பத்தித்திறனற்றவையாக மாற்றுவதுடன் மீன்பிடித்தலுக்கு பயன்படுத்தப்படும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் முறைகளை வினைத்திறனற்றதாக மாற்றலாம். எதிர்காலத்தில் இந்த நிலையினை எதிர்நோக்குவதற்காக பெரிய மீன்பிடிக்கலன்களை பயன்படுத்தல், நீண்ட கடற்தொழில் பயணங்கள் மற்றும் புதிய மீன்பிடி உபகரணங்களின் வளர்ச்சி ஆகியவை சாத்தியமான முன்மொழிவுகளாக இருக்கும் என்பதுடன், இந்த சமாளிப்பு உத்திகள் அதிகம் பாதிக்கப்படக்கூடிய சிறிய அளவிலான மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு மிகவும் சவாலாக இருக்கும்.

- கட்டமைப்பு, சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மை தொடர்பான ஏற்கனவே இருக்கும் பாதிப்புகளுடனான கூட்டு விளைவுகள், COVID-19 மற்றும் இதேபோன்ற எதிர்பாராத நிலைகளினால் கடற்தொழில் சமூகங்களின் சுகாதார மற்றும் சமூக-பொருளாதார காரணிகளில் ஏற்படக்கூடிய விளைவுகளை அதிகரிக்கும்.

**நன்றியறிதல்**

இந்த திட்டத்திற்கு நிதியுதவியளித்த நீர்வாழ் உயிரினக்காட்சியகத்தின் கடற்பாதுகாப்பு நடவடிக்கை நிதியத்திற்கு *(New England Aquarium's Marine Conservation Action Fund)* நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். இந்த ஆராய்ச்சியில் பங்குபற்றியமை, ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பங்களித்தமைக்காக பதிலளித்தவர்களுக்கு நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும், வடக்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் உள்ள எங்கள் ஆராய்ச்சி உதவியாளர்களை ஒருங்கிணைத்தமை, கணக்கெடுப்புகளின் தர சரிபார்ப்பு செயல்முறைக்கு உதவிய திருமதி ஜெகதீஸ்வரி ஏகாம்பரம் குணசிங்கம் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலதிகமாக, நேர்காணல்களை நடாத்திய எங்கள் ஆராய்ச்சி உதவியாளர்களின் பணியை பாராட்டுகின்றோம்: கௌசல்யா பாலசூரிய, திலினி கமகே, மனுஜா ஹெண்டவிதாரன, இஃப்லால் இலியாஸ், தமிழினி கணேசலிங்கம், முஹம்மது முஜாஸ், கஜந்தினி ராஜநளேந்திரன், ஷாலங்கா ரஞ்சுலா, ரிஃப்தா ரிஸ்வான், அந்தோனி சந்தோஷ், சரண்யா சின்னத்துரை, சத்தியவாகீஸ்பரன் சிவந்தன், அபிலாகினி விக்ரமன் மற்றும் முத்துலிங்கம் யுஹிந்தன். இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இஷா மற்றும் நடுனி மல்லிகா ஆராச்சி ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.  இந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தரவு பகுப்பாய்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய  கலாநிதி. நெல்லி கடகி அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**References**

1. Foreign Ministry - Sri Lanka. (2020, March 20). Declaration of police curfew island wide [Press release]. Retrieved from https://mfa.gov.lk/declaration-of-police-curfew-island-wide/
2. National Aquatic Resources Research and Development Agency (NARA). (2019). Fisheries Industry Outlook- 2018 (7-24). http://www.nara.ac.lk/wp-content/uploads/2017/09/fisheries-industry-outlook-2018-converted-Copy.pdf
3. Edirisinghe, K., Wansapala, J., & Wickramasinghe, I. (2018). Review of marine fishery status along the supply chain in Sri Lanka. International Journal Of Food Science And Nutrition, 3(4), 10-23.
4. Arulananthan, K. (2017). Proceedings of the Workshop on Present Status of Research Activities on Climate Change Adaptations. Proceedings of the Workshop on Present Status of Research Activities on Climate Change Adaptations (Ed. B. Marambe), 121-126.
5. Bennett, N. J., Finkbeiner, E. M., Ban, N. C., Belhabib, D., Jupiter, S. D., Kittinger, J. N., Mangubhai, S., Scholtens, J., Gill, D., & Christie, P. (2020). The COVID-19 Pandemic, Small-Scale Fisheries and Coastal Fishing Communities. *Coastal Management, 48* (4): 336-347, doi: 10.1080/08920753.2020.1766937

Oceanswell
Oceans for all, forever